# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064853

1. District : VELLORE
மாவட்டம்
PS: VIGILANCE AND ANTI - CORRUPTION, VELLORE
காவல்நிலையம்
Year: 2019
ஆண்டு
FIR No: 16/2019
மு.த.அ. எண்
Date: 13.09.2019
நாள்

2. (i) Act சட்டம்: —
Sections பிரிவுகள்: 7 of P.C.(Amendment) Act 2018 r/w 102 Crpc.
(ii) Act சட்டம்: Prevention of Corruption
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018.
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from 12.09.19 நாள் முதல்
Date to : — நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : 18.00 hrs நேரம் முதல்
Time to : 23.30 hrs. நேரம் வரை
(b) information Received at PS. Date : 12.09.19
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 16.00 hrs. நேரம்
(c) General Diary Reference : Entry No(s) VOLUME - II 2019
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 17.30 hrs நேரம்

4. Type of Information : Written/Oral : Tamil Typed complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: - South East - 1.5kms
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : Joint Sub-Registrar Office, Velapadi, Vellore. முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. JOTHI
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Sampath
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth 1965
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : INDIAN
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Dy.Inspection Cell Officer
தொழில்
(g) Address : Deputy Inspection cell officer, O/o the District Inspection cell office, Collectorate, Vellore-9.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. P. Sivalingam s/o perumal, JSR-I, Vellore. 2. Tr. S. Manigandan s/o Selvaraj, Document writter, Vellore. 3. Tr. V. Kathirvelan s/o Vaithiaswaran, Document writter, Vellore, 4. Tr. V. Kumaravel s/o Vajravel, Document writter, Vellore, 5. Tr. S. Balamurugan s/o Sundaravadivel, Document writter, Vellore, 6. Tr. A. Sandarrajan s/o Arumugam, Document writter, Vellore. 7. Tr. C. Kumaran s/o Chinnakuzhandai, Broker, O/o JSR, Vellore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
"NO DELAY"

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet Attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ....................: நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 13/9/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 13/09/19

15. Date & Time of despatch to the court: 13.09.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 17.00 hrs.

Name: பெயர் S. VIJAY
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண்
VIGILANCE & ANTI-CORRUPTION,
VELLORE.

**எதிரிகள்:**

1. திரு.P.சிவலிங்கம், த/பெ பெருமாள், எண்.1 இணை சார் பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை), ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகம், வேலூர்.
2. திரு.S.மணிகண்டன் (42/2019) த/பெ செல்வராஜ், எண்.18, பொன்னியம்மன் கோவில் தெரு, சாய்நாதபுரம், வேலூர் (ஆவண எழுத்தர்).
3. திரு.V.கதிர்வேலன் (49/2019) த/பெ.வைத்தீஸ்வரன், எண்.118A, பகுதி-3, சத்துவாச்சாரி, வேலூர் (ஆவண எழுத்தர்)
4. திரு.V.குமரவேல் (41/2019) த/பெ வஜ்ஜிரவேல், எண்.1, ராமதாஸ் நகர், சத்தியமங்கலம், அணைக்கட்டு தாலுக்கா, வேலூர் (ஆவண எழுத்தர்)
5. திரு.S.பாலமுருகன் (47/2019) த/பெ சுந்தரவடிவேலு, எண்.2/55, ஜெகதீச முதலி தெரு, அரியூர், வேலூர் (ஆவண எழுத்தர்)
6. திரு.A.சௌந்தரராஜன் (43/2019) த/பெ ஆறுமுகம், எண்.71, பிள்ளையார் கோவில் தெரு, தொரப்பாடி, வேலூர் (ஆவண எழுத்தர்)
7. திரு.C.குமரன் (44/2019) த/பெ சின்னகுழந்தை, எண்.113, பிள்ளையார் கோவில் தெரு, வேலப்பாடி, வேலூர் (தினக்கூலியாக வேலை செய்யும் இடைத்தரகர்)

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

இன்று 13.09.19- ஆம்தேதி 1600 மணிக்கு, வேலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S. விஜய் ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.S.ஜோதி அவர்கள் நிலையம் ஆஜராகி, கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, பொருள்: இருதுறை திடீர் சோதனை – வேலூர் மண்டல பத்திரப்பதிவு துணைத்தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள எண்.1 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் 12.09.2019 அன்று இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது – புகார் அளித்தல் - நடவடிக்கை எடுத்தல் வேண்டி – புகார்மனு. - வேலூர் மாவட்டம், வேலூர் மாநகரம், வேலூரிலிருந்து ஆரணி செல்லும் சாலையில், வேலப்பாடி எஸ்.பி.பங்களா பேருந்து நிறுத்தம் அருகில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகத்தின் தரைத்தளத்தில் உள்ள எண்-1 இணை சார்பதிவாளர் மற்றும் எண்-2 இணை சார்பதிவாளர் அலுவலகங்களில் பத்திரம், பிற பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக எண்.1 இணை சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தனித்தனியாக பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைதரகர்கள் (புரோக்கர்கள்) மூலமாகவும் கையூட்டு பெறுவதாக எனக்கு கிடைக்க பெற்ற நம்பகமான தகவலின் பேரில், 12.09.2019-ஆம் தேதி 1600 மணிக்கு நான், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் இணைந்து கலந்து ஆலோசனை செய்து 1730 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து

புறப்பட்டு, வேலூர் எண்.1 இணை சார்பதிவாளர் மற்றும் எண்-2 இணை சார் பதிவாளர் அலுவலகங்களில் இருதுறை திடீர் சோதனை 1800 மணிக்கு துவக்கப்பட்டது. வேலூர் ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக கட்டிடமானது வேலூர் மாநகரம், வேலூரிலிருந்து ஆரணி செல்லும் சாலையில், வேலப்பாடி எஸ்.பி. பங்களா பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ளது. அந்த கட்டிடத்தின் தரைத்தளத்தில் வேலூர் எண்-1 இணை சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் எண்-2 இணை சார் பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ளன. அந்த கட்டிடத்தின் முதல் தளத்தில் பத்திரப்பதிவு துணைத்தலைவர் அலுவலகம், மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) அலுவலகம் மற்றும் மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலகமும் இயங்கி வருகின்றன. அந்த ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக கட்டிடத்தை சுற்றி சுற்று சுவர் கட்டப்பட்டிருந்தது. சுற்றுச்சுவரில் இரண்டு கிரில் கதவுகள் போடப்பட்டிருந்தன. அந்த ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகத்தின் முன்புறம் போர்டிகோவும், அதனைபடுத்து, பிரதான வாயிலானது இரும்பு கிரில் கேட்டுடன் அமைந்திருந்தது. பிரதான வாயிலை அடுத்து வராண்டாவும், அதன் இடது புறம் செல்லும் நீண்ட வராண்டாவின் இடது புறத்தில் மேற்கு திசை நோக்கி உள்ள வாயிலை கொண்ட சுமார் 20X25 அளவுள்ள எண்.1 இணை சார் பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை) அலுவலகத்தில், வடக்கு நோக்கியவாறு உள்ள மேடையின் மேல் எண்.1 இணை சார் பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை) இருக்கை மேஜையுடன் இருந்தது. அந்த இருக்கையின் வலது புறத்தில் திரு.அபிநந்தன், இளநிலை உதவியாளர் அவர்களின் இருக்கையும், அதற்கு எதிர் திசையில் உதவியாளர் திரு.சக்தி சிவம் என்பவரின் இருக்கையும், திரு.சக்தி சிவம் இருக்கையின் வலது புறத்தில் அலுவலக உதவியாளர் திரு.பாபு அவர்களின் இருக்கையும் இருந்தன. மேற்படி அறையில் மூன்று கணினிகளும், ஒரு இரும்பு பீரோவும், ஒரு ஜெராக்ஸ் மிஷினும் இருந்தன. அதனை அடுத்து சுமார் 20X25 அளவுள்ள அசல் பதிவு பிரிவு அலுவலகம் உள்ளது. அந்த அறையில் வடகிழக்கு மூலையில் கண்காணிப்பாளரின் இருக்கையும் அதன் எதிரில் ஒரு கேமிரா ஆபரேட்டரின் இருக்கையும், மூன்று தகவல் தொகுப்பு பணியாளர் (Data Entry Operator) இருக்கைகளும் இருந்தன. அந்த அலுவலக அறையை அடுத்து மாற்றுத்திறனாளிகளுக்கான கழிவறையும், இரண்டு கிரில் கேட்டுகளை கொண்ட இரண்டு பொது மக்களின் உபயோகத்திற்கான கழிவறைகளும், அதனை அடுத்து வடக்கு திசை நோக்கியவாறு உள்ள வாயிலை கொண்ட அலுவலக ஊழியர்களின் கழிவறையும், அதனை அடுத்து மற்றொரு மாற்றுத்திறனாளிகளின் கழிவறையும் உள்ளது. மேற்படி எண்-1 இணை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு எதிர் திசையில் கிழக்கு நோக்கிய வாயிலை கொண்ட சுமார் 12X25 அளவுள்ள எண்.2 இணை சார் பதிவாளர் அலுவலகமும் இருந்தது. மேற்படி நீண்ட வராண்டாவில் தீத்தடுப்பு உபகரணங்களாக பயன்படக்கூடிய நான்கு வாளிகள் இரண்டு வரிசையில் மண் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது. மேலும், வராண்டாவில் வலதுபுறத்தில் தெற்கு நோக்கிய வாயிலை கொண்ட பதிவேடுகள் அறை இருந்தது. திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு எண்.1 இணை சார் பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை) திரு.P.சிவலிங்கம் மற்றும் ஆஜரில் இருந்த அலுவலர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் தங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டும் தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. திடீர் சோதனையின்போது, 1)

திரு.G.கணேஷ் (28/19) த/பெ கங்காதர், உதவியாளர், 2) திரு.M.S.ஜெயபிரகாஷ் (42/19) த/பெ சிவய்யா, தகவல் தொகுப்பு பணியாளர், 3) திரு.K.உதயகுமார் (50/19) த/பெ கிருஷ்ணன், பதிவறை எழுத்தர், 4) செல்வி.S.கங்காதேவி (24/19) த/பெ சேகர், தகவல் தொகுப்பு பணியாளர், 5) செல்வி.E.ரேவதி (27/19) த/பெ எத்திராஜ், கேமிரா ஆபரேட்டர், 6) திரு.P.தமிழ்மணி (34/19) த/பெ பன்னீர்செல்வம், தகவல் தொகுப்பு பணியாளர், 7) திரு.J.பாபு (55/19) த/பெ ஜெயராமன், அலுவலக உதவியாளர், 8) திரு.E.அபிநந்தன் (24/19) த/பெ இளங்கோவன், இளநிலை உதவியாளர், 9) திரு.G.சக்தி சிவம் (27/19) த/பெ குணசேகர், உதவியாளர் மற்றும் 10) திரு.D.கார்த்தி (29/19) த/பெ தெய்வமணி, ஆவண எழுத்தரின் உதவியாளர் (கைபேசி எண்.9486841471) ஆகியோரும், ஆவண எழுத்தர்கள் மற்றும் பொது மக்கள் சிலர் எண்.1 இணை சார் பதிவாளர் அலுவலக அறைக்குள்ளேயும், இணை சார் பதிவாளர் வேலூர் அலுவலக வளாகத்திற்குள்ளும் இருந்தார்கள். அங்கிருந்த நபர்களை ஒவ்வொருவராக சோதனை செய்ததில், திரு.மணிகண்டன், ஆவண எழுத்தர் என்பவரிடமிருந்து ரூபாய்.2,44,260/- இருந்தது அப்பணம் குறித்து அவரிடம் விசாரணை செய்ததில், அவர் 12.09.2019 பத்திரப்பதிவு செய்த வகையிலும், மற்ற ஆவண எழுத்தர்களிடமிருந்து, திரு.சிவலிங்கம், எண்.1 இணை சார்பதிவாளருக்கு லஞ்சமாக கொடுக்க வேண்டிய பணத்தை தான் பெற்று எண்.1 இணை சார் பதிவாளர் திரு.சிவலிங்கம் அவர்களுக்கும் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கும் லஞ்சமாக கொடுக்க எடுத்து வந்த தொகை என தெரிவித்தார். மேலும், அத்தொகைக்கு உரிய விளக்கம் ஏதும் கூறவில்லை. அப்பணத்தை எண்ணிப்பார்க்க, அதில் ரூ.2,44,260/- இருந்தது. அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனையில் திரு.கதிர்வேலன், ஆவண எழுத்தர் என்பவரிடம் இருந்த ரூ.25,000/- குறித்து விசாரணை செய்து, அத்தொகைக்கு உரிய விளக்கம் கூறாத காரணத்தினாலும், மேலும், அத்தொகையானது லஞ்சமாக திரு.சிவலிங்கம், எண்.1 இணை சார்பதிவாளருக்கும் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கும் லஞ்சமாக எடுத்து வந்த தொகை என தெரிவித்தார் அப்பணம் ரூ.25,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், திரு.குமரவேல், ஆவண எழுத்தர் என்பவரிடம் இருந்த ரூ.19,470/- குறித்து விசாரணை செய்யப்பட்டது. அந்த பணம் 12.09.2019 அன்று பத்திரப்பதிவு செய்த வகையில் எண்.1 இணை சார்பதிவாளர் திரு.சிவலிங்கம் அவர்களுக்கும் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கும் லஞ்சமாக கொடுக்க எடுத்த வந்த தொகை என தெரிவித்தார். அதனை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் ரூ.19,470/- இருந்த அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனையில் திரு.பாலமுருகன், ஆவண எழுத்தர் என்பவரிடம் இருந்த ரூ.5,450/- குறித்து விசாரணை செய்து, அப்பணமானது லஞ்சமாக எண்.1 இணை சார்பதிவாளர் திரு.சிவலிங்கம் அவர்களுக்கும் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கும் லஞ்சமாக கொடுக்க எடுத்த வந்த தொகை ரூ.5,450/- என தெரிவித்தார். அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனையில். திரு.சௌந்தராஜன், ஆவண எழுத்தர் என்பவரிடம் இருந்த ரூ.5,890/- குறித்து விசாரணை செய்யப்பட்டது. அந்த பணம் 12.09.2019 பத்திரப்பதிவு செய்த வகையில் எண்.1 இணை சார்பதிவாளர் திரு.சிவலிங்கம் அவர்களுக்கும் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கும் லஞ்சமாக கொடுக்க எடுத்த வந்த தொகை என தெரிவித்தார். அதனை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில்

ரூ.5,890/- இருந்தது. அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனையின்போது, எண்.1 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்த திரு.குமரன், தனி நபர் (தினக்கூலி) என்பவரிடம் ரூபாய்.670/- இருந்தது சம்மந்தமாக விசாரணை செய்யப்பட்டது. மேற்படி விசாரணையின்போது, அவரால் தக்க முகாந்திரம் கூற இயலாததால், அந்த பணம் வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் திடீர் ஆய்வின்போது வேலூர் ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகத்தின் தரைத்தளத்தில் உள்ள எண்.1 இணை சார் பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை) திரு.சிவலிங்கம் அவர்களின் மேஜையின் இடது பக்க இழுவறையில் இருந்த சால்வையின் நடுவில் ரூ.15,700/-ம், வலது பக்க இழுவறையில் இருந்த Stamp Act Book-ன் நடுவில் ரூ.15,500/- இருந்தது. மேற்படி பணம் குறித்து, எண்.1 இணை சார் பதிவாளர் திரு.சிவலிங்கம் அவர்களிடம் விசாரணை செய்தபோது, அவரால் அந்த பணத்திற்கு தக்க முகாந்திராம் கூற இயலவில்லை மேலும் அந்த பணத்திற்கும் தனக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னார், எனவே தக்க முகாந்திரம் கூறாத அத்தொகை ரூ.31,200/- திரு.சிவலிங்கம் அவர்களின் மேஜையின் இழுவறைகளிலிருந்து வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், பதிவறை எழுத்தர் அருகில் இருந்த Dust Bin-ல் இருந்து ரூ.1,910/- இருந்தது. அந்த பணம் குறித்து, அலுவலகத்தில் இருந்த அலுவலர்களையும் மற்றவர்களையும் விசாரணை செய்தபோது, மேற்படி பணத்திற்கு யாரும் உரிமை கோரவில்லை. அதனால், உரிமை கோராத பணம் ரூ.1,910/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், வராண்டாவில் தொங்கவிடப்பட்டிருந்த தீயணைப்பு வாளியினை சோதனை செய்ய அதில் ரூ.1,120/- இருந்தது. அந்த பணம் குறித்து, அலுவலகத்தில் இருந்த அலுவலர்களையும் மற்றவர்களையும் விசாரணை செய்தபோது, மேற்படி பணத்திற்கு யாரும் உரிமை கோரவில்லை. அதனால், உரிமை கோராத பணம் ரூ.1,120/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், எண்.2 இணை சார் பதிவாளர் அலுவலக அறையினுள் இருந்த மேஜையை சோதனை செய்ய, மேஜையின் மேல் இருந்த பேப்பரின் கீழே ரூ.13,890/- இருந்தது. அந்த பணம் குறித்து, அலுவலகத்தில் இருந்த அலுவலர்களையும் மற்றவர்களையும் விசாணை செய்தபோது, மேற்படி பணத்திற்கு யாரும் உரிமை கோரவில்லை. அதனால், உரிமை கோராத பணம் ரூ.13,890/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், மாற்றுத் திறனாளி கழிவறையை சோதனை செய்ய, கத்தையாக பணம் இருந்தது அதனை எண்ணிப்பார்க்க அதில் பணம் ரூ.7,000/- இருந்தது. அந்த பணம் குறித்து, அலுவலகத்தில் இருந்த அலுவலர்களையும் மற்றவர்களையும் விசாரணை செய்தபோது, மேற்படி பணத்திற்கு யாரும் உரிமை கோரவில்லை. அதனால், உரிமை கோராத பணம் ரூ.7,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் சோதனையில், எண்.1 இணை சார் பதிவாளர் மற்றும் எண்.2 இணை சார் பதிவாளர் அலுவலகங்களிலிருந்து கணக்கில் வராத, தக்க முகாந்திரம் கூறாத மற்றும் உரிமை கோராத பணம் ரூ.3,55,860/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் எண்.1 இணை சார் பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை) திரு.சிவலிங்கம் அவர்களிடம் அலுவலக வருகை பதிவேட்டை கேட்க, அவர் அலுவலக பணியாளர்களின் வருகை பதிவேடு மற்றும் தகவல் தொகுப்பு பணியாளர்களின் வருகை பதிவேடு ஆகியவற்றை ஆஜர் செய்தார். அவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. பின்னர் தனி நபர் கையிருப்பு பதிவேடு குறித்து கேட்க,

அதனையும் எடுத்து ஆஜர் செய்தார் அப்பதிவேடும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் 12.09.2019 அன்று பதிவான பத்திர விபரம் குறித்து விசாரணை செய்தபோது 77 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், பத்திரப்பதிவு தொடர்பாக வசூலிக்கப்பட்ட தொகை அனைத்தும் ஆன்லைன் மட்டுமே பெறப்பட்டுள்ளது. வசூலிக்கப்பட்ட தொகை குறித்தான கணிணி பதிவுகளை தங்களிடம் பதிவிறக்கம் செய்து சப்டிவிஷன் கணக்கு, பிரிவு 41 கணக்கு, சி.டி/கேமிரா கணக்கு, "H" கணக்கு ஆகிய விவரங்கள் அடங்கிய தாள் ஒன்று எண்.1 இணை சார்பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை) கையொப்பமிட்டு ஒப்படைத்தார். இருதுறை திடீர் சோதனை தொடர்பாக முழுமையான விவரங்கள் அடங்கிய செயல்முறை 12.09.2019 மாலை சுமார் 1800 மணி முதல் இரவு சுமார் 2330 மணி வரை தயார் செய்யப்பட்டு, அதன் நகல் திரு.P.சிவலிங்கம், எண்.1 இணை சார் பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை), ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகம், வேலூர் அவர்களுக்கு வழங்கி ஒப்புதல் பெறப்பட்டது. இந்த இருதுறை திடீர் கூட்டு தணிக்கையில் பணம் ரூ.3,55,860/-கைப்பற்றப்பட்டது. திரு.P.சிவலிங்கம், த/பெ பெருமாள், எண்.1 இணை சார் பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை), ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகம், வேலூர் தனது பதவியை அதிகார துஷ்பிரயோகம் செய்து ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் ஆகியோர் மூலம் பொது மக்களிடம் இருந்து லஞ்சமாக பணத்தை ஆவண எழுத்தர்களான 1) திரு.S.மணிகண்டன் (42/2019) த/பெ செல்வராஜ், 2) திரு.V.கதிர்வேலன் (49/2019) த/பெ.வைதீஸ்வரன், 3) திரு.V.குமரவேல் (41/2019) த/பெ வஜ்ஜிரவேல், 4) திரு.S.பாலமுருகன் (47/2019) த/பெ சுந்தரவடிவேலு, 5) திரு.A.சௌந்தரராஜன் (43/2019) த/பெ ஆறுமுகம் மற்றும் தினக்கூலியாக வேலை செய்யும் இடைத்தரகர் 6) திரு.C.குமரன் (44/2019) த/பெ சின்னகுழந்தை ஆகியோர் மூலம் கட்டாய வசூல் செய்து லஞ்சமாக கேட்டு பெற்றுக்கொண்ட 1) திரு.P.சிவலிங்கம், த/பெ பெருமாள், எண்.1 இணை சார் பதிவாளர் (மாவட்ட பதிவாளர் நிலை), ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகம், வேலூர் ஆகியோர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட லஞ்ச பணம் ரூ.3,55,860/-யும் கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட அசல் செயல்முறை ஆகியவற்றையும் தங்களிடம் ஒப்புவிக்கிறேன். இப்படிக்கு. Sd/-xxxxxxxx எஸ். ஜோதி 13/9/19.

Sir,

Received the complaint on 13.09.2019 at 1600 hrs. and a case in Vigilance and Anti-Corruption, Vellore Detachment Cr.No.16/2019, u/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w 102 Cr.P.C was registered on 13.09.2019 at 1600 hrs. Sd/-xxxxx S.Vijay, 13.09.2019 Inspr./V&AC/VLR.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மற்றும் இரு துறை திடீர் கூட்டு சோதனைகளின் செயல்முறை ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, வேலூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிக் கொள்ளப்பட்டது.

(S.VIJAY) 13/9/19
Insp/V&AC/VLR